Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 148/2024**

**Deposition of PW.8 (LW.9)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மயில்ராஜ் | ஜாதி | : | |
| த/பெ | : | மாரியப்பன் | தொழில் | : | ஓய்வு, சார்பு ஆய்வாளர். |
| கிராமம் | : | அம்மையநாயக்கனூர் | சமயம் | : | |
| தாலுகா | : | நிலக்கோட்டை | வயது | : | 61 /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.04.2026.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் சின்னாளபட்டி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக கடந்த 19.04.2024 அன்று அலுவலில் இருந்தபோது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று 19.45 மணிக்கு சென்று சிகிச்சையில் இருந்த கலிக்கம்பட்டி, போக்குவரத்து நகர், KPS நகரைச் சேர்ந்த வீரணன் மகன் மணிமாறன் வயது 44 என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று அதன் மேல் சின்னாளபட்டி காவல்நிலைய மனு எண்.159/2024 பதிவு செய்யப்பட்டது. அதன்பின்பு விசாரணைக்கு பின்பு 08.06.2024 அன்று மாலை சுமார் 17.00 மணிக்கு சின்னாளபட்டி காவல்நிலைய குற்ற எண்.106/2024 சட்டபிரிவுகள் 294(b), 324, 506(2) இதச வாக வழக்கு பதிவு செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **(அ.சா.ஆ.6/PW.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பின்பு அன்றையதினமே 08.06.2024 ஆம் தேதி மாலை சுமார் 18.00 மணிக்கு சம்பவ இடமான கலிக்கம்பட்டி, பஞ்சாயத்து அலுவலகம் அருகே உள்ள எதரி பாண்டி வீட்டின் முன்பு சாட்சிகள் 1) ராஜா,வயது 32, த.பெ. ஆண்டி, கலிக்கம்பட்டி 2) வீரணன், வயது 65, த.பெ. ராமசாமி, கலிக்கம்பட்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடமும், பார்வைமகசரும் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் **(அ.சா.ஆ.7/PW.8)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்பவ இடத்திலேயே சாட்சி பார்வைமகசரில் கையொப்பம் பெற்று, சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து 161 குவிமுச படி வாக்குமூலம் பெற்றேன்.

பின்பு சாட்சிகள் வாதி மணிமாறன், த.பெ. வீரணன், கலிக்கம்பட்டி, 2) தங்கமணி, த.பெ. வீரபத்திரன், கலிக்கம்பட்டி 3) ராமகிருஷ்ணன், த.பெ. உடையார், கலிக்கம்பட்டி 4) அய்யப்பன், த.பெ. செல்வம், கலிக்கம்பட்டி 5) ஜெயச்சந்திரன், த.பெ. அருணாச்சலம், கலிக்கம்பட்டி பிரிவு ஆகிய சம்பவ இட சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து 161 குவிமுச படி வாக்குமூலம் பெற்றேன். அதன்மேல் வழக்கின் எதிரிகளான A1) பெருமாள் ராஜ் A2) ராதிகா A3) பாண்டியன் A4) கனகமணி ஆகியோரை தேடி வந்த நிலையில் 29.06.2024 ஆம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு எதிரி பாண்டியின் வீட்டின் அருகே வைத்து எதிரி A2) ராதிகா வை பெண் காவலர்கள் உதவியுடன் எதிரியை கைதுக்கான காரணங்கள் கூறி உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி கைது செய்து அதன்பின்பு நிலையம் கொண்டு வந்தோம். பெண் காவலர்கள் மூலம் எதிரியை பரிசோதனை செய்தும், உணவு மற்றும் மருத்துவ வசதிகள் கொடுக்கப்பட்டது. அதன்பின்பு நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

மற்ற எதிரிகளான A1) பெருமாள் ராஜ் A3) பாண்டியன் A4) கனகமணி ஆகியோர்கள் திண்டுக்கல் மாவட்ட அமர்வு நீதிமன்ற Crl.M.P.No.1768/2024, dated: 04.07.2024 உத்தரவின் படி முன்பிணையில் சென்றுள்ளார்கள்.

அதன்பின்பு 27.07.2024 ஆம் தேதி இவ்வழக்கின் வாதி மணிமாறனுக்கு சிகிச்சை அளித்த திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவர் திரு. தீபக்சங்கர் அவர்களை விசாரணை செய்து விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் பெற்றேன். மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினார். மேற்படி மருத்துவரை விசாரணை செய்து 161 குவிமுச வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றையதினமே 27.07.2024 ஆம் தேதி இவ்வழக்கின் எதிரிகளுக்கு எதிராக சட்டப்பிரிவு 294(b), 324, 506(2) இதச படி குற்ற இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகார் வாக்குமூலத்தை யார், எந்த தேதியில் வாங்கினார்கள் என்றால் நான் தான் 19.04.2024 அன்று வாங்கினேன். 19.04.2024 அன்று பாராளுமன்ற தேர்தல் நடந்துகொண்டிருந்தது என்றால் சரிதான். பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றதால் வாக்குச்சாவடியில் பாதுகாப்பிற்காக காவலர்கள் இருந்திருப்பார்கள் என்றால் சரிதான். வாக்குச்சாவடிக்கும், சம்பவ இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 500 மீட்டர் தூரம் இருக்கும். சம்பவம் நடந்த போது சம்பவத்தை பற்றி போலிசாருக்கு தெரிந்திருந்தது என்று உங்களுக்கு தகவல் வந்ததா என்றால் யாரும் தகவல் சொல்லவில்லை.

இந்த வழக்கில் காயம்பட்ட நபர் நேரடியாக காவல்நிலையம் வந்தாரா அல்லது மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். முதலில் காவல்நிலையத்திற்கு வந்ததாக எனக்கு நியாபகம் உள்ளது. சரியாக என்னால் சொல்ல இயலவில்லை. காவல்நிலையத்திற்கு வந்திருந்தால் காயம்பட்டவருக்கு மருத்துவ நமுனா கொடுத்திருப்பீர்கள் என்றால் சரிதான். மருத்துவ நமுனா இந்த வழக்கில் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரருக்கும், புகார்தாரரின் மனைவியான 2வது எதிரிக்கும் நீதிமன்றத்தில் விவகாரத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நீதிமன்றத்தில் யார் விவகாரத்து வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியுமா என்றால் அவர் மனைவி தாக்கல் செய்துள்ளார். புகார்தாரர் 2வது எதிரியை அடித்து காயப்படுத்தியதால் தான் அவருடன் சேர்ந்து வாழ முடியாது என்று சொல்லி விவகாரத்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. அவர்கள் குடும்ப பிரச்சனை.

புகார்தாரரை இந்த வழக்கில் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் 2 முறை விசாரித்தோம். வழக்கு சம்மந்தமாக வழக்கு சம்பவத்திற்கு பிறகு புகார்தாரரையும், எதிரியையும் விசாரித்தீர்காள அல்லது அதற்கு முன்பு விசாரித்தீர்களா என்றால் சம்பவத்திற்கு பிறகு தான் 26.04.2024 அன்று விசாரித்தேன். இந்த வழக்கின் எதிரிகயை எந்த தேதியில் கைது செய்தீர்கள் என்றால் 27.04.2024 அன்று கைது செய்தோம். இந்த வழக்கில் எந்த ஒரு பொருளையும் நீங்கள் கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

இந்த வழக்கை நீங்கள் விசாரித்தீர்களா அல்லது காவல் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் நானும் விசாரித்தேன், காவல் ஆய்வாளரும் விசாரித்தார். யாருடைய விசாரணையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் என்னுடைய விசாரணையை தாக்கல் செய்தேன். சாட்சிகளை விசாரிக்கும் போது உலக்கையால் அடிக்கவில்லை என உங்களது விசாரணையில் தெரிய வந்தது என்றால் சரிதான். மனுதாரருக்கு தெரியபடுத்திய பிறகு தான் உலக்கையால் அடிக்கவில்லை என்ற வார்த்தையை நீக்கியுள்ளீர்கள் என்றால் சரிதான்.

அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் யார் யார் என்ன வார்த்தை சொல்லி திட்டினார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல, கூறியுள்ளார். நிகழ்நிலை புகார்தாரர் என்ன படித்துள்ளார் என்று நீங்கள் விசாரித்தீர்களா என்றால் அவர் 12ம் வகுப்பு வரை படித்துள்ளார். புகார்தாரர் எதற்காக இந்த புகாரை எழுதவில்லை என்றால் அவருக்கு காயம் ஏற்பட்டிருந்ததால் அவரால் எழுத முடியவில்லை.

சம்பவம் பற்றி உங்களுக்கு எப்போது தகவல் கிடைத்தது என்றால் சம்பவத்தன்றே கிடைத்துவிட்டது. உங்களிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையில் காவல்நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.06.2024 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். 2 மாதம் கழித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கு முதல் தகவல் அறிக்கையில் காரணம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையை புகார்தாரருக்கு கொடுத்ததற்கான கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரியல்ல, கையொப்பம் வாங்கிய முதல் தகவல் அறிக்கை வழக்கு கோப்பில் உள்ளது. கையொப்பம் இல்லாத முதல் தகவல் அறிக்கை தவறுதலாக நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டுள்ளது. நீதிமன்றத்திற்கு அசல் முதல் தகவல் அறிக்கை தான் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

விபத்து பதிவேட்டில் 5 நபர்கள் அடித்ததாக தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் 4 நபர்கள் அடித்ததா தான் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவரை நீங்கள் விசாரித்தீர்கள் என்றால் சரிதான். மருத்துவரை நீங்கள் முறையாக விசாரித்திருந்தால் எதிரிகளின் விபரங்களை பற்றி தெரிந்திருப்பீர்கள் என்றும், நீங்கள் முறையாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட நபரை யார் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்ற விபரத்தை விசாரித்து தெரிந்துகொண்டீர்களா என்றால் தெரிந்துகொண்டேன். அவரை மற்றொரு நபர் அழைத்து சென்றார்.

நீங்கள் இந்த வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எதிரிகளை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor